செ.வெ.எண்: 313 நாள்: 16.4.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தில் குறிப்பிட்ட விற்பனை கடைகள் மட்டும் வாரத்தில் அனைத்து நாட்களிலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள கால அளவான காலை 6 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை திறந்திருக்க அனுமதி.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் குறிப்பிட்ட விற்பனை கடைகள் மட்டும் வாரத்தில் அனைத்து நாட்களிலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள கால அளவான காலை 6 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை திறந்திருக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை பரவாமல் கட்டுப்படுத்திடவும் மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக நோய் பரவலை தடுக்கும் நடவடிக்கையாக 16.4.2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியருக்கு காணொலிக்காட்சி வாயிலாக பல்வேறு அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள்.

குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து மளிகை கடை, காய்கறி மற்றும் பழக்கடை, அடுமனை (பேக்கரி) வேளாண் இடு பொருட்கள் மற்றும் உரக்கடைகள், மீன், கோழி, ஆடு உள்ளிட்ட அனைத்து இறைச்சி விற்பனை கடைகள் வாரத்தில் அனைத்து நாட்களிலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள கால அளவான காலை 6 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை திறந்திருக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

புதுக்கோட்டை நகராட்சியைப் பொருத்தவரை மீன், கோழி, ஆடு உள்ளிட்ட அனைத்து இறைச்சி விற்பனை கடைகள் வாரத்தில் சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் மட்டும் புதுக்கோட்டை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியின் எதிர்புறம் உள்ள தற்காலிக பேருந்து நிலையத்திலும், அறந்தாங்கி நகராட்சியைப்

பொருத்தவரை அறந்தாங்கி - பேராவூரணி சாலையில் அமைந்துள்ள வாரச் சந்தையிலும், மற்ற வார நாட்களில் வழக்கமான இடங்களிலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள கால அளவான காலை 6 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அனைத்து கடைகளிலும், கடை உரிமையாளர்கள் தேவையான பாதுகாப்பு உபகரணங்களுடனும், சமூக இடைவெளிக்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை கடைப்பிடிப்பதுடன், வருகைதரும் பொதுமக்கள் முகக்கவசம் அணிந்துவரவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் மருந்தகங்கள் மற்றும் ஆவின் பாலகங்கள் மட்டும் எப்போதும் போல் இயங்கும். இவ்வுத்தரவு 17.4.2020 முதல் நடைமுறைக்கு வருகிறது. இவ்வுத்தரவினை கடைப்பிடிக்காத மற்றும் மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**